**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.74/2016**

2025—ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் நாள் செவ்வாய்ட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.1 விஜயகுமார் வயது 56, த/பெ அண்ணாமலை**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

10. வாதி தரப்பில் வா.சா.ஆ.1. - 51/2015 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ஏற்கனவே இது சம்மந்தமாக 06.11.2015 அன்று தினமலர் நாளிதழில் வாதி பாஸ்கரன் தரப்பில் விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் விளம்பரத்தை நான் பார்க்கவில்லை. நான் விளம்பரத்தை பார்த்த பிறகுதான் எங்கள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தினோம் என்றால் நாங்கள் அதுப்போல் செய்யவில்லை. நான் வாதி பாஸ்கரன் தரப்பில் கொடுத்த விளம்பரத்தை ஆட்சேபணை செய்யாமலும் மற்றும் எங்கள் தரப்பில் அவசரமாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தினோம் என்றால் இல்லை, மற்றும் சாமி பெயரில் தவறுதலாக குறிப்பிட்டுள்ளோம் என்றாலும் பதிவு செய்யப்பட்ட இடத்தில்தான் தவறு நடந்து விட்டது. எங்கள் தரப்பில் தவறு நடக்கவில்லை.

11. நான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திய பின் படித்து பார்த்துள்ளேனா என்றால் நாங்கள் படித்து பார்த்தோம், ஆனால் அதுப்படி பின்பற்றவில்லை. ஏனென்றால் குடும்பம் பாரம் அதிகமாகி விட்டதால் மேற்படி விதிகளை பின்பற்றவில்லை. குடும்பம் பாரம் எனக்குதான் அதிகமாகி விட்டது, ஆனால் தலைவர் மற்றும் பொருளாளர் அவர்களும் விதிகளை பின்பற்றவில்லையா என்றால் அவர்களும் பி.வா.சா.ஆ.1 விதிகளை பின்பற்றவில்லை. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டு 1 வருடம் கழித்துதான் திருத்தல் செய்தோம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. பி.வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணம் எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அது சர்வே எண்.232/12 மற்றும் 232/11D ஆகிய இரண்டு சர்வே எண்கள் சம்மந்தமாகதான் செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.19 ஆவணத்தின் பட்டா எண். 9946 மற்றும் சர்வே எண்.232/14 என்பதற்குதான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3ல் உள்ள இடமும் பி.வா.சா.ஆ.19ல் உள்ள இடமும் ஒன்றுதான் என்று நிரூபிக்க எங்கள் தரப்பில் ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் ஆவணம் உள்ளது. நாங்கள் இந்திராகாந்தி அம்மையாரிடம் இடம் வேண்டும் என்று கேட்டதற்கு அவர் எங்களுக்கு தானமாக இடத்தை கொடுத்து விட்டார். **நீதிமன்ற கேள்வி என்ன இடம் என்றால் கோயில் கருவறை இடமாகும்.**

13. கோயில் எந்த வருடம் கட்டி முடித்தார்கள் என்றால் 2003ல் தொடங்கி 2009ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. கோயில் கட்டிடத்தை 2009ம் ஆண்டே கட்டி முடித்து அதன் பின்னிட்டு 2015ம் ஆண்டு மேற்படி இடத்தை தானமாக வாங்க என்ன அவசியம் ஏற்பட்டது என்றால் கோயில் சார்ந்து உள்ள அனைத்து இடங்களும் இந்திராகாந்தி அம்மையாருக்கு சொந்தமாக இருந்ததால் பிறகு இந்திராகாந்தி அம்மையாருக்கு சொந்தமான இடத்தில் அவர்களுக்கு தெரியாமல் கோயில் கட்டியதால் மேற்படி இந்திராகாந்தி அம்மையாருக்கும் எங்களுக்கும் தெரியவில்லை. அதன் பின்னிட்டு விவரம் தெரிந்த பின் நாங்கள் இந்திராகாந்தி அம்மையாரிடம் முறையீடு செய்தோம். அதன் பின் இந்திராகாந்தி அம்மையார் மேற்படி இடத்தை எங்களுக்கு தானமாக எழுதி கொடுத்தார்.

14. நாங்கள் கோயில் கட்ட தொடங்கிய ஆரம்பித்தில் மேற்படி இடம் இந்திராகாந்திக்கு சொந்தமில்லை என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. அது பொது இடம் என்று எனக்கு தெரியும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை நாங்களே தயார் செய்து விட்டோம் என்றால் இல்லை. வாதி பாஸ்கரன் மேற்படி இடத்தை நிர்வாகம் செய்து வந்ததால் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை நாங்களே தயார் செய்து நாங்கள் நிர்வாகம் செய்து வருவது போல் சொல்லியுள்ளோம் என்றால் 2009ம் ஆண்டிற்கு பிறகு 3 வருடங்கள் அவர்தான் நிர்வாகம் செய்து வந்தார். அதன் பிறகு நாங்கள்தான் நிர்வாகம் செய்து வருகிறோம். சாட்சி பிறகு தன்னிச்சையாக 2009ல் முதலில் நாங்கள்தான் நிர்வாகம் செய்தோம், அதன் பின்னிட்டு வாதி பாஸ்கரன் வேண்டுதல் இருப்பதால் நான் நிர்வாகம் செய்வதாக கோரியபடி நாங்கள் அவரிடம் நிர்வாகம் செய்ய சம்மதம் தெரிவித்தோம்.

15. மேற்படி சம்மதம் ஏதும் கொடுக்காமல் மேற்படி வாதிதான் நிறுவன அறக்கட்டளையாளர் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.17ல் 06.08.2015ம் ஆண்டு விண்ணப்பம் கோரி தாக்கல் செய்துள்ள மனுவில் 50 நபர்களிடம் கையொப்பம் பெற்றுள்ள நபர்களின் தந்தை பெயரோ, முகவரியோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.18ல் 04.09.2015ம் ஆண்டு விண்ணப்பம் கோரி தாக்கல் செய்துள்ள மனுவில் 30 நபர்களிடம் கையொப்பம் பெற்றுள்ள நபர்களின் பெயர், தந்தை பெயரோ, முகவரியோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களும் எங்களின் வசதிக்கா தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

16. பி.வா.சா.ஆ.22 எதற்காக தாக்கல் செய்தோம் என்றால் தற்காலிக தர்மகர்த்தா என்பதால் ஜெயராமன் பெயரில் பதிவு செய்தோம். 2015ம் ஆண்டில் பி.வா.சா.ஆ.1 ஏற்பட்டுள்ளது ஆனால் பி.வா.சா.ஆ.22 ஆவணம் ஜெயராமன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் கோயிலுக்கும் பி.வா.சா.ஆ.22 இடத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அவரை தர்மகர்த்தா என்ற முறையில் நியமித்தோம். அதன்படி ரசீது கொடுத்தார்கள்.

**வாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.